**OS.No.181/2015**

**DW1 –சித்ரா**

**க/பெ.குமார்**

**நாள். 19.3.2025.**

**<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. என் சகோதரி ராணி திடீரென்று காலமாகிவிட்டார் என்றால்ஆமாம்அவர் காலமாகும் பொழுது முதல் வாதிக்கு ஆறு வயது இரண்டாம் வாதிக்கு சுமார் இரண்டு வயது இருக்கும் என்றால் சரிதான்.என் சகோதரி காலமான பின்பு அவருடைய தகப்பனாரின் தாயார் இந்திராணி தான் அந்த குழந்தைகளை பாதுகாத்து வளர்த்து வந்தார் என்றால் ஆமாம்.அவருடைய அப்பாவும் வளர்த்து வந்தார்.வாதியின் தகப்பனார் இரண்டாவது திருமணம் செய்து கொண்டாரா என்று கேட்டால் அப்படித்தான் சொன்னார்கள்.எங்களுடன் பிறந்த சகோதரர்கள் கிடையாது பெண்மக்கள் மட்டும் தான் இருக்கிறோம்.

2. என் தகப்பனார் பழனிசாமி கவுண்டர் தண்ணிர் வண்டி ஓட்டிக்கொண்டு இருந்தார். அவர் இறப்பதற்கு முன்பு பல வருடங்களாக மருத்துவமனை சென்று சிகிச்சை எடுத்துக் கொண்டு இருந்தார் என்று சொன்னால் அவ்வப்போது செல்வார்.அவர் டி எஸ் கே மருத்துவமனை திருப்பூர் மற்றும் குமரன் மருத்துவமனை திருப்பூர் ஆகியவற்றில் சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்றால் அவர் பார்ப்பார்.என் தகப்பனாருக்கு பக்கவாத நோய் இருந்தது என்றால் சரி அல்ல அவர் தண்ணி வண்டி ஓட்டிக்கொண்டு இருந்ததால் அவருக்கு கால் சரியாக எடுத்து வைத்து நடக்க முடியாது அவ்வளவுதான்.

3. என் அப்பாவிற்கு வயோதிகம் காரணமாக கண் பார்வை குறைந்துவிட்டது என்று சொன்னால் சரி அல்ல அவருக்கு நன்றாக கண் பார்வை இருந்தது.அவர் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான மருத்துவ குறிப்புகள் என் வசம் இருக்கிறதா என்றால்

இல்லை.அவ்வப்போது டாக்டரிடம் பார்த்து வருவார் அவ்வளவுதான்.மருத்துவ குறிப்புகள் இருக்கிறதா என்று நான் பார்த்துவிட்டு சொல்கிறேன்.

4. என் தாயார் கமலம் கேன்சர் நோயால் பாதிக்கப்பட்டார் என்றாலும் சரிதான்.முதலில் ஷீலா ஹாஸ்பிடல் கோயம்புத்தூர் மருத்துவம் பார்த்தார்கள்.அதன் பின்பு குப்புசாமி நாயுடு மருத்துவமனையில் மருத்துவம் பார்த்தார்கள்.வேலூர் சிஎம்சி யில் மருத்துவமும் பார்த்தார்கள். அதன் பின்பு அடையார் கேன்சர் சென்டரிலும் மருத்துவம் செய்து கொண்டார்கள்.காரைக்குடியிலும் மருத்துவம் பார்த்தார்கள்.

5. 2004 இல் முதல் முதலாக அவருக்கு புற்றுநோய் என்று கண்டறியப்பட்ட போதும் அவர் இறக்கும்போது 2008 ஆம் வருடமாகும்.

6. எனக்கு 1996 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. வா.சா.ஆ.6 ஆவணத்தில் என் தாயார் இறந்து போனதற்கு கொடுக்கப்பட்ட பேப்பர் விளம்பரம் தான் அதில் குடும்பத்தார்கள் பெயர் அனைத்தும் இருக்கிறதா என்றால் இருக்கிறது.

7. 2004 மற்றும் 2005 ஆண்டுகளில் என்ன தகப்பனார் மருத்துவமனையில் செக்கப் செய்வதற்காக சென்று வந்து கொண்டிருந்தார்.2004 மற்றும் 2005 ஆண்டுகளில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்று சொன்னால் சரியல்ல.என் தகப்பனார் உயில் எழுதிய சமயத்தில் ரெஜிஸ்டர் வீட்டிற்கு வந்தார்.எதனால் ரெஜிஸ்டர் வீட்டுக்கு அழைக்கப்பட்டார் என்ற விவரம் என் அப்பா அம்மாவிற்கு தான் தெரியும் எனக்கு தெரியாது.என் அப்பாவிற்கு ரெஜிஸ்டர் அலுவலகம் செல்ல முடியாத காரணத்தினால் தான் பதிவாளர் வீட்டிற்கு வந்தாரா என்றால் என் தகப்பனாருக்கு கால் நடக்க இயலாமல் இருந்தது அதனால் வந்தார்.

8. அந்த சமயத்தில் யார் யார் வீட்டில் இருந்தார்கள் என்றால் என்னை போன் செய்து வரவழைத்திருந்தார்கள் என் அப்பா அம்மா இருந்தார்கள் அதுபோக ராஜு மற்றும் அன்சாரி ஆகியோர் இருந்தார்கள். பதிவாளரும் இருந்தார்.நான் அங்கு வீட்டிற்கு செல்லும் போது டைப் செய்தார்களா அல்லது எழுதி வைத்திருந்தார்களா என்று

கேட்டால் அது ஏற்கனவே எழுதி வைக்கப்பட்டிருந்தது.எங்கு வைத்து எப்போது யாரால் எழுதி வைக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் தெரியாது.

9. உயலில் நான் முதல் முதல் பார்த்த போது முத்திரைத்தாள் இருந்ததா என்றால் அது வெறும் தாளில் தான் இருந்தது முத்திரைத்தாள் கிடையாது.இரண்டு பக்கங்கள் தான் இருந்தது.நான் வீட்டுக்கு போகும்போது காலை சுமார் ஏழு முதல் எட்டு மணி வரை இருக்கும்.நான் பார்க்கும் போது ஒவ்வொரு பக்கத்திலும் ரேகை இருந்ததா என்றால் ரேகை இருந்தது.அதேபோல் நான் பார்க்கும் போது சயத் அன்சாரி கையெழுத்து போட்டு சீல் வைத்திருந்தாரா என்றால் இல்லை சாட்சி மீண்டும் தானாக முன்வந்து தனக்கு சீல் வைத்திருந்ததா என்றால் ஞாபகம் இல்லை என்று கூறுகிறார்.நான் பார்க்கும்போது கையெழுத்து இருந்ததா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

10. நான் உயிலில்அதனை முதல் முதலாக பார்க்கும்போது மகாலிங்கம் மற்றும் மோகன் ஆகியோர் கையெழுத்து மற்றும் ரேகை இருந்ததா என்றால் அது ஞாபகம் இல்லை.நான் சும்மா எட்டரை மணி அளவில் வீட்டிற்கு போய் விட்டேன் என்னுடன் உயிலை சுமார் பத்தரை மணி அளவில் பார்த்தேன் என் கணவர் வரவில்லை நான் மட்டும்தான் போனேன்.

11. நான் 18.3.2005 அன்று தான் வீட்டிற்கு போனேன். நான் அன்றைய தேதியில் 9 மணி அளவில் வீட்டிற்கு போனேன் உயிலை சுமார் பத்தரை மணி அளவில் பார்த்தேன்.நான் பார்த்தபோது உயில் முழுமையாக இருந்ததா என்றால் இரண்டு பக்கம் எழுதப்பட்டிருந்தது அப்போது நான் பார்க்கும் போது கை ரேகை எல்லாம் கிடையாது. நான் பார்த்தபோது உயில் தட்டச்சு செய்யப்பட்டு இருந்தது அது கையால் எழுதப்பட்டதா என்று கேட்டால் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது.தட்டச்சு செய்யப்படுவதற்கும் கணினியில் அடிக்கப்படுவதற்கும் எனக்கு வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியும் .சாட்சி மீண்டும் முன் வந்து தெரியாது என்று கூறுகிறார் .

12. நான் வீட்டிற்கு சென்றபோது மோகனும் மகாலிங்கமும் அங்கு இருந்தார்களா என்றால் ஆமாம் இருந்தார்கள் .அவர்கள் இருவரும் உயிலில் கையெழுத்து செய்தார்களா என்றால் ஆமாம் செய்தார்கள் .மோகனும் மகாலிங்கமும் கையெழுத்து செய்யும்போது சுமார் 10:30–11 மணி இருக்கும் .மோகனும் மகாலிங்கமும் தவிர வேறு யாரும் அன்றைய தினம் உயிலில் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல ராஜு என்பவர் கையெழுத்து செய்தார் .உயிலில் இரண்டாவது பக்கத்தில் நிரூபைத்தவர்கள் என்ற இடத்தில் நானும் ராஜவும் கையெழுத்து செய்திருக்கிறோம். மோகன் மற்றும் மகாலிங்கம் ஒரே சமயத்தில் கையெழுத்து போட்டார்கள் என்றால் ஒரே சமயத்தில் கையெழுத்து போட முடியாது ஆனால் செய்தார்கள்.

13. அன்றைய தினம் நான் ராஜு,மோகன் மற்றும் மகாலிங்கம் ஒரே நாளில் கையெழுத்து செய்தோமா என்றால் ஆமாம் .பழனிசாமி சுமார் 4 முதல் 5 ரேகைகள் வைத்திருப்பாரா என்றால் ஞாபகம் இல்லை ரேகை வைத்தார் அது மட்டும் ஞாபகம் இருக்கிறது. பழனிசாமி தன் கையெழுத்திட்ட பின்பு அதன் அருகில் ரேகை வைத்தாரா என்று கேட்டால் ஞாபகம் இல்லை. அசல் உயிலை என் அப்பா என் அம்மாவிடம் கொடுத்தாரா என்றால் என் அம்மாவிடமோ என்னிடமோ கொடுக்கவில்லை அதனை பதிவாளர் எடுத்து சென்று விட்டார் .

14. என் அப்பா அனைத்து மக்களின் மீதும் பாசமாக இருந்தாரா என்றால் என் அக்கா இறந்து விட்டதால் அவனுடைய மகன்கள் உடன் தொடர்பே இல்லாமல் போய்விட்டது. அசல் உயிலை பார்த்து இருக்கிறேன் அது எங்கே இருக்கிறது என்றால் என்னிடம் தான் இருக்கிறது. அதனை நீதிமன்றத்தில் ஒப்படைக்க முடியுமா என்றால் ஒப்படைக்க முடியாது 15 லட்சம் ரூபாய் பணம் வாங்கி இருக்கிறேன். உயிலை ஒப்படைத்து விட்டு அதற்கு அடமானம் பத்திரம் ஏதாவது எழுதி கொடுத்திருக்கிறேன் என்றால் ஆமாம் கொடுத்திருக்கிறேன்.

15. இன்றிலிருந்து எத்தனை நாட்களுக்கு முன்பாக என்னிடம் உயில் வந்து சேர்ந்தது என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை என் அப்பா இறந்த பின்பு என் அம்மாவும் இறந்த பின்பு என் வசம் உயில் வந்தது. என் அப்பா ஆங்கிலத்தில் கையெழுத்து செய்வாரா என்றால் இல்லை இனிஷியல் மட்டும் ஆங்கிலத்தில் போடுவார். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை சாட்சியிடம் காட்டி அந்த உயிலில் ஒவ்வொரு பக்கத்தில் இருக்கும் கையெழுத்தும் யாருடையது என்று கேட்டபோது என் அப்பாவுடையது என்று கூறுகிறார் அந்த ஒவ்வொரு கையெழுத்தும் வெவ்வேறு மாதிரி இருக்கிறது என்றும் முழுமையாக மாறுபடுகிறது என்றும் சொன்னால் தெரியாது என்று கூறுகிறார்.

16. மேலும் பி.வா.சா.2 அதாவது வா.சா.7 ஆவணத்தில் இரண்டாவது பக்கத்தில் இருக்கும் கையெழுத்து படிக்க இயலாமல் இருக்கிறது என்று சொன்னால் ஒவ்வொரு எழுத்துக்கும் இடைவெளி இல்லாமல் கூட்டாக இருக்கிறதா என்று சொன்னால் ஆமாம் இருக்கிறது. உயிலில் என்ன காரணத்திற்காக மற்ற வாரிசுகளுக்கு சொத்துக் கொடுக்கவில்லை என்று எழுதப்பட்டு இருக்கிறதா என்றால் என் அம்மாவிற்கு எழுதி கொடுத்திருக்கிறார்கள் காரணம் எதுவும் சொல்லவில்லை. என்ன காரணத்திற்காக என் தாயாருக்கு சொத்து கொடுப்பதாக சொல்லி இருக்கிறார் என்றால் காரணம் எதுவும் இல்லை .

17. தகப்பனார் உடல் நிலையை பற்றி உயிலில் சொல்லி இருக்கிறாரா என்றால் வயோதிகம் காலத்தில் உடல்நிலை நாளுக்கு நாள் குறைகிறது என்று சொல்லப்பட்டு இருக்கிறதா என்றால் உயிலில் அப்படித்தான் இருக்கிறது .

18. தான செட்டில்மென்ட் என் அம்மா எழுதி வைத்த போது நான் பதிவாளர் அலுவலகத்திற்கு போகவில்லை. தான செட்டில்மெண்ட் பி.வா.சா.4 எழுதி வைக்குமாறு என் அம்மாவிடம் நான் கேட்டனா என்றால் நான் கேட்கவில்லை தான செட்டில்மெண்ட் எழுதி வைப்பதற்கு பதிவாளர் வீட்டிற்கு வந்தாரா என்றால் எனக்கு தெரியாது. தான செட்டில்மெண்ட் எழுதி வைத்த சில நாட்களில் என் அம்மா

காலமாகிவிட்டார் என்று சொன்னால் 2007 ல் தான செட்டில்மெண்ட் எழுதப்பட்டது 2008 ல் தான் என் அம்மா காலமானார்.

19. கேன்சர் நோயை கட்டுப்படுத்த வீரியமிக்க மருந்துகள் கொடுக்கப்படும் என்று சொன்னால் பொதுவாக கொடுக்கப்படும் ஆனால் என் அம்மாவிற்கு கொடுக்கப்படவில்லை. என் அம்மாவிற்கு தமிழகத்தில் உள்ள மிகச் சிறந்த மருத்துவமனைகள் அனைத்திலும் மருத்துவம் செய்தோம் என்றால் ஆமாம்.2007 இல் இருப்பதற்கு முன்பாக எந்த மருத்துவமனையில் மருத்துவம் பார்க்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை .என் அம்மா குப்புசாமி நாயுடு மருத்துவமனை கோயம்புத்தூரிலேயே காலமாகி விட்டார்கள் என்றால் ஆமாம். என் அம்மா பல மாதங்களாக சுயநினைவு இல்லாமல் குப்புசாமி நாயுடு மருத்துவமனையில் இருந்தார் என்றால் சரியல்ல அப்படி எல்லாம் இருக்கவில்லை. குப்புசாமி நாயுடு மருத்துவமனையில் உள்ளிருப்பு நோயாளியாக எத்தனை நாட்கள் இருந்தார்கள் என்றால் அப்படி எல்லாம் இல்லை அப்பப்போ போய் வருவார்கள் அவ்வளவு தான் .2004 முதல் 2005 க்குள் அறுவை சிகிச்சை செய்தார்கள் அந்த சமயத்தில் உள்நோயாளியாக இருந்தார் .

20. வயிற்றில் அறுவை சிகிச்சை செய்தார்கள் .என் அம்மாவிற்கு வலி அதிகமாக இருந்தால் பெயின் கில்லர் மருந்துகள் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல .அசல் தான செட்டில்மெண்ட் அடமானத்தில் இருக்கிறது. செட்டில்மெண்ட் ஆவணத்தில் இருக்கும் கையெழுத்து ஒவ்வொரு பக்கத்திலும் வெவ்வேறு மாதிரி இருக்கிறது என்று சொன்னால் அப்படி இல்லை ஒரே போல் தான் இருக்கிறது .தான செட்டில்மென்டல் யாரு சாட்சிகள் என்று எனக்கு தெரியாது ஆனால் ஏற்கனவே சாட்சிகள் இருந்தது பாலு மற்றும் அர்ஜுன் ஆகியோர் எங்கள் ரிலேஷன் தான் அவர்களுடைய கையெழுத்து தான் இருக்கிறது எப்போது போட்டார்கள் என்றெல்லாம் தெரியாது .

21. தாவா இரண்டாம் அயிட்டம் சொத்து என் அம்மாவிற்கு பாத்தியப்பட்டது. இரண்டாம் அயிட்டம் சொத்தைப் பொருத்தம் எழுத்து மூலமாக ஆவணங்கள் எதுவும் இல்லை

என்று சொன்னால் எழுத்து மூலமாக இல்லை வாய் மூலமாக இருக்கிறது மற்றும் பணம் கொடுத்து இருக்கிறோம் .பணம் கொடுத்து இருப்பதற்கு எந்த ஆவணமும் இருக்கிறதா என்றால் பணம் கொடுத்து இருக்கிறோம் மட்டும்தான். பணம் கொடுத்தது எந்த தேதி எந்த மாதம் என்றெல்லாம் தெரியாது. வாதியின் தாயார் ராணி மற்றும் அவருடைய வீட்டுக்காரர் ராணி இறப்பதற்கு 5–6 ஆண்டுகளுக்கு முன்பே பணம் வாங்கி விட்டார்கள். பணம் பல தவணைகளில் கொடுத்தேனா என்றால் மூன்று தடவை கொடுத்திருக்கிறேன்.

22. திருமணம் ஆகும்போது எனக்கு சுமார் 20 வயது இருக்கும். நான் ராணிக்கு மூன்று தவணைகளில் பணம் கொடுத்த போதும் எப்போதெல்லாம் பணம் கொடுத்தேன் எந்த தவணை எந்தெந்த மாதத்தில் இருந்தது என்றெல்லாம் எனக்கு ஞாபகம் இல்லை. ஒவ்வொரு தவணை எவ்வளவு ரூபாய் என்று தெரியாது என்றால் ஒரு முறை 4 லட்சமும் ஒரு முறை மூன்று லட்சமும் அதன் பின்பு சில நகைகளும் கொடுத்து இருக்கிறேன்.தேதி ஞாபகம் இல்லை.பணமும் நகையும் கொடுத்ததற்கு சாட்சிகள் யாரும் இல்லை என்று சொன்னால் என் அக்காவும் மாமா மணிஆகியோர் மட்டும்தான் இருந்தார்கள். நான் பணமும் கொடுக்கவில்லை நகையும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் வாதிகள் கூட்டு சுவாதீனத்தில் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V SREE VIDYA

Digitally signed by V SREE VIDYA
DN: cn=V SREE VIDYA, ou=JUDICIAL JUDGE , o=THE PRINCIPAL SUBORDINATE COURT , l=TIRUPPUR, st=TAMIL NADU, c=91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.